SIVANMANAI

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

## பதிகம்: திருத்தசாங்கம்

THIRUVASAGAM GROUP

Scan this QR code using the WhatsApp Camera to join this group

**சிவன்மனை**

**சென்னை-600091**

www.fhyzics.net/sivanmanai

# திருத்தசாங்கம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

ஏர்ஆர் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீர்ஆர் திருநாமம் தேர்ந்து உரையாய்-ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று.

ஏதம்இலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான் நாடுஉரையாய்-காதலவர்க்கு
அன்புஆண்டு மீளா அருள்புரிவான் நாடுஎன்றும்
தென்பாண்டி நாடே தெளி.

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமைஆளும்
மாதுஆடும் பாகத்தான் வாழ்பதிஎன்-கோதாட்டிப்
பத்தர்எல்லாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தர கோசமங்கை ஊர்.

செய்யவாய்ப் பைஞ்சிறகின் செல்வீநம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுஉரையாய்-தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தம் காண்உடையான் ஆறு.

கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய்-நெஞ்சத்து
இருள்அகல வாள்வீசி இன்புஅமரும் முத்தி
அருளும்மலை என்பதுகாண் ஆய்ந்து.

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்புஆடாச் சீர்உடையான் ஊர்வதென்னே-எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண்ஏத்திசைப்ப
வான்புரவி ஊரும் மகிழ்ந்து.

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதுஇல் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்-ஏற்றார்
அழுக்குஅடையா நெஞ்சுஉருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை.

இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசுஇயம்பாய்-அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத்து ஓங்கும்
பருமிக்க நாதப் பறை.

ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என்-தீயவினை
நாளும் அணுகாவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளி அறுகாம் உவந்த தார்.

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடிகூறாய்-சாலவும்
ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறுஆம் கொடி.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி